**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SULUR**.

| | |
|---|---|
| Calendars<br>Miscellaneous<br>Preliminary Register<br>Sessions | Case No. CC 584 of 2025 |

Depositions of PW -6 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. சண்முகவேலு

Father's Name : த/பெ.

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th **day of May** 2026.

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜராகி பாகுபாச பிரிவு 355 ன் படி மனு தாக்கல் செய்துள்ளார். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல்விசாரணை**

நான் தற்பொழுது கோவை மாவட்டம் தொண்டாமுத்தூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 12.09.2024 ஆம் தேதி கோவை மாவட்டம் கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது பெண் தலைமை காவலர் பிரேமலதா அவர்கள் காலை 11.00 மணியளவில் நிலைய அலுவலகத்தில் இருந்த பொழுது கிடைக்கப்பெற்ற இன்டிமேஷன் அடிப்படையில் கோவை அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரி சென்று மேற்படி சிகிச்சையில் இருந்த முத்துக்குமார் என்பவர் பேச முடியாத நிலையில் இருந்ததால் அவருடன் இருந்த அவரது மனைவி சண்முகப்பிரியா என்பவர் அளித்த புகார் வாக்குமூலத்தை பதிவுசெய்து அதன் அடிப்படையில் நிலையம் வந்து கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண் 401/2024 சட்டப்பிரிவு 281,125(a) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.அசல் புகார் மனு மற்றும் முதல் தகவலின் அறிக்கையினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்தும், ஒரு நகலை புலன் விசாரணைக்காக உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் அவர்கள் பார்வைக்கு வைத்துள்ளார். மேற்படி வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் ராதாகிருஷ்ணன் அவர்கள் அன்றைய தினமே 12.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தங்கராஜ் மற்றும் சென்னியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.4** ஆக செய்யப்படுகிறது. சாட்சிகள் சண்முகப்பிரியா, கார்த்திகேயன் ஸ்டாலின்ராஜ், சென்னியப்பன் மற்றும் தங்கராஜ் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

3. பின்னர் சிகிச்சையில் இருந்த முத்துக்குமார் அவர்கள் சிகிச்சை பலனின்றி இறந்து விட்டதாக தகவல் கிடைக்கப்பெற்று வழக்கின் சட்ட பிரிவை 281,125(a) **BNS** ல் இருந்து 281,106(1)**BNS** சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தாக்கல் செய்துள்ளார். சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் வழக்கினை புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நான் கோவை அரசு மருத்துவமனை சென்று சவக்கிடங்கின் முன்பாக சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டேன் பிரேத விசாரணை சாட்சிகள் சம்பத்குமார், சுப்பிரமணியன், பழனிச்சாமி ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். புகார்தாரரை விசாரித்து மறுவாக்கு மூலம் பதிவு செய்தேன். சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் அவர்களின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதத்துடன் காவலர் திருநாவுக்கரசு அவர்கள் மூலமாக பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினேன். மேலும் எதிரி தன்னிச்சையாக நிலையம் ஆஜரானவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்து நிலைய முன் ஜாமீனில் விடுவித்தேன். சம்பவத்தில் சம்பந்தப்பட்ட எதிரி ஓட்டிச் சென்று விபத்து ஏற்படுத்திய லாரியினை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப் பெற்றேன். ஆய்வறிக்கை **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் அவர்கள் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளர் ஆய்வுக்கு உட்படுத்தி ஆய்வறிக்கை கிடைக்கப்பெற்றேன். ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மோட்டார் வாகன ஆய்வாளர் சண்முகசுந்தரம் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.. முத்துக்குமார் அவர்களுக்கு சிகிச்சை அளித்த மற்றும் அவரின் இறப்பை உறுதி செய்த கோவை அரசு மருத்துவமனை மருத்துவர்.கவிதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இறப்பு கடிதம் கிடைக்கப்பெற்றேன். இறப்பு கடிதம் **அ.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் முத்துக்குமார் அவர்களின் பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை மேற்கொண்ட கோவை அரசு

மருத்துவமனை மருத்துவர்.கலாவதி பிரபாகர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றேன். பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இத்துடன் வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி மீது 04.11.2024 ஆம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்..

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சம்பந்தமாக எங்கள் காவல் நிலையத்திற்கு எப்பொழுது தகவல் கிடைக்கப்பெற்றது என்றால் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த அன்று கிடைக்கப்பட்டுள்ளது. நேரம் சரியாக ஞாபகம் இல்லை. மருத்துவமனையில் இருந்து தகவல் கிடைக்கப்பெற்றது. மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சண்முகப்பிரியா அவர்கள் என்ன படித்து உள்ளார் என்பது குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் அது சம்பந்தமாக விசாரணை மேற்கொள்ளவில்லை. சண்முக பிரியா அவர்கள் அளித்த வாக்குமூலத்தில் லாரியின் ஓட்டுனர் பின்னர் விசாரித்து தெரிந்து கொண்டார் எனக் கூறியுள்ளார். யாரிடம் கேட்டு டிரைவரின் பெயர் தெரிந்து கொண்டார் என்பது குறித்து விசாரித்தேனா என்றால் விசாரித்தேன்.

யார் ஓட்டுனரின் பெயர் தன்னிடம் சொன்னது சம்பந்தமாக விசாரித்தேன். சாட்சிகளிடமும் விசாரித்தேன். ஆனால் அவர்கள் யார் சொல்லி அவருடைய பெயர் தெரிந்து கொண்டார்கள் என குறிப்பாக எனது விசாரணையின் பொழுது குறிப்பிட்டு சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையில் புகார் ஆனது  காலை 11.00 மணிக்கு பெறப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். 12.09.2024 ஆம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். Type of information என்ற பகுதியில் எழுத்து மூலமாக புகார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசரில் அல்லது மாதிரி வரைபடத்தில் மின் கம்பங்கள் சம்பவத்தில் இருந்ததாக எந்த குறிப்புகளும் இல்லை என்றால் சரியல்ல மின்கம்பம் இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மின்கம்பத்தில் விளக்குகள் இருந்ததாக குறிப்பாக குறிப்பிடவில்லை ஆனால் விளக்குகள் இருந்தது. நான் சாட்சிகளை 13.09.2024 ஆம் தேதி மருத்துவமனையில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் விசாரித்த சாட்சி கார்த்திகேயன் யாரிடம் எதிரியின் பெயர் கேட்டு தெரிந்து கொண்டேன் என எனது விசாரணையில் குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும் நான் விசாரித்த சாட்சிகள் மேற்படி லாரியின் ஓட்டுநர் லாரியிலிருந்து இறங்கி வந்த பொழுது பார்த்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் சரிதான். நான் விசாரித்த சாட்சிகள் கார்த்திகேயன் மற்றும் ஸ்டாலின்ராஜ் இருவரும் இறந்த முத்துக்குமார் அவர்களின் நண்பர்கள் என்றால் சரிதான். நான் பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மார்க்ஸ் கம்பெனி மற்றும் அருகாமையில் இருந்த வீடுகளில் இருந்தவர்கள் யாரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல

விசாரித்தேன். வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. தனிநபர் சாட்சிகள் யாரையும் இவ்வழக்கில் நான் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. சம்பவத்தில் இறந்த முத்துக்குமார் அவர்கள் வாகனத்தின் பதிவு எண் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால் பதிவு செய்யப்படாமல் இருந்த வாகனம் பதிவெண் குறித்து விசாரித்தேன். ஆனால் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றும் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரி அதிவேகமாகவோ அஜாக்கிரதையாகவோ வாகனத்தை ஏற்கவில்லை என்றால் சரியல்ல. விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை

**Signature of Witness**

(**Sd/- T. Arunkumar**)
**Judicial Magistrate**,
**Sulur**.